திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நிறைய பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கும் பகுதி ஆரணி தாலுக்கா. அந்த தாலுக்காவிலே பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நிலம் வேண்டுமென்று கூட்டுறவு சொசைட்டி மூலம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் அது வழங்கப்படவில்லை. அது விரைவில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்போல ஆரணி, காஞ்சீபுரம், கும்பகோணம் போன்ற பட்டு உற்பத்தியிருக்கும் பகுதிகளில் இதுபோன்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் சொன்னது போல் ஆரணியிலும் அந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் முயற்சித்து கூட்டுறவுச் சங்கமே அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கும்படி தயார் செய்துவிட்டால் உதவித் தொகை கொடுத்து அந்த வளர்ச்சியை அங்கு ஏற்படுத்த முடியும்.

Survey on availability of coal

* 50 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey about the availability of **coal in** this State has been conducted recently; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

வழக்குரைஞர்கள் கட்டண விதங்களை உயர்த்தல்

* 51 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோர்ட்டு வழக்குகளில், வக்கீல்களுக்கு கொடுக்கப்படும் செலவுத் தொகையில் சேரும் பீஸை உயர்த்த வேண்டும் என்று வக்கீல்கள் சங்கத்திலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?